RNI-NO: TNTAM/2021/83936





# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-5 | இதழ்- 181 | ஜூலை.7 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# இந்தோனேஷியா உள்ளிட்ட 3 நாடுகள் பயணத்தை தொடங்கினார் பிரதமர் மோடி!

புதுடெல்லி: ஜூலை.7-

இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கான தனது பயணத்தை பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கினார்.

இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் பிரதமர் மோடி இன்று முதல் 11ம் தேதி வரை பயணம் மேற்கொள்கிறார். இதற்காக புதுடெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் பிரதமர் மோடி புறப்பட்டுச் சென்றார். அவரை அதிகாரிகள் வழியனுப்பி வைத்தனர்.

இன்று இந்தோனேஷியா செல்லும் பிரதமர் மோடி, வரும் 8ம் தேதி அங்கிருந்து ஆஸ்திரேலியா செல்கிறார். அங்கு அந்நாட்டுப் பிரதமர் அந்தோணி அல்பனேசியுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். அதன்பிறகு, 9ம் தேதி மெல்போர்ன் நகரில் உள்ள மார்வெல் ஸ்டேடியத்தில் இந்தியர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். ஆஸ்திரேலிய பயணத்தை முடித்துக் கொண்டு நியூசிலாந்து செல்கிறார்.



தனது மூன்று நாடுகள் பயணத்தை முன்னிட்டு பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்தோனேஷிய அதிபர் பிரபோவோ சுபியான்டோவின் அழைப்பின் பேரில் ஜூலை 6 முதல் 8 வரை இந்தோனேஷியாவுக்குப் பயணம் செய்ய உள்ளேன். இந்தியாவும் இந்தோனேஷியாவும் வலுவான நாகரிக உறவுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. எனது இந்த பயணம் நமது பன்முகக் கூட்டாண்மையின் அனைத்து அம்சங்களையும் வலுப்படுத்தும். இந்தப் பயணத்தின் போது, இந்தோனேஷியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினருடன் நான் கலந்துரையாடுவேன். மேலும், நமது நெருங்கிய கலாச்சார உறவுகளுக்குச் சான்றாக இருக்கும் யோக்யகர்தாதவில் உள்ள பிரம்பனன் கோயில் வளாகத்தை அதிபர் பிரபோவோவுடன் இணைந்து பார்வையிடுவேன்.

இந்தோனேஷியாவில் இருந்து ஆஸ்திரேலியா செல்கிறேன். ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பனீஸின் அழைப்பின் பேரில் நான் மெல்போனுக்குச் செல்கிறேன். எனது இந்த பயணம் இரு நாடுகளக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும். பிரதமர் அல்பனீஸ் உடனான பேச்சுவார்த்தைகளின்போது பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடுகள், கல்வி, இரு நாட்டு மக்களுக்கு இடையேயான உறவுகள் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வேன். இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடுவேன். வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், விளையாட்டு, விளையாட்டு அறிவியல் ஆகிய துறைகளில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் தங்கள் இருதரப்பு உறவுகளை ஆழமாக்குவதற்கு இந்த பயணம் வாய்ப்பளிக்கும்.

மெல்போர்னில் இருந்து நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனின் அழைப்பின் பேரில் நான் ஆக்லாந்து செல்கிறேன். எனது இந்த பயணத்தின்போது, பொருளாதாரம், வர்த்தகம், வணிகம் சார்ந்த உறவுகளை எவ்வாறு மேலும் வலுப்படுத்துவது என்பது குறித்து பிரதமர் லக்சனுடன் கலந்துரையாடுவேன். சுதந்திர வர்த்தக ஒப்பந்ததில் கையெழுத்திட்டதன் மூலம், இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்த இந்தியாவும் நியூசிலாந்தும் உறுதிபூண்டுள்ளன. இந்தபயணத்தின்போது அங்குள்ள இந்திய வம்சாவளியினருடனான பெருந்திறள் கூட்டத்தில் உரையாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்.

கிழக்கு மற்றும் தெற்கு இந்தியப் பெருங்கடல் பிராந்தியங்களில் அமைந்துள்ள இந்தோனேஷியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குப் பிறகு நியூசிலாந்துக்கு நான் மேற்கொள்ள இருக்கும் இந்த பயணம் இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை, மகாசாகர் தொலைநோக்குப் பார்வை, சுதந்திரமான இந்தோ பசுபிக் பிராந்தியம் குறித்த நமது அணுகுமுறை ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தும்" என தெரிவித்துள்ளார்.




## மானாமதுரை நகராட்சி கூட்டத்தில் முதல்வர் புகைப்படம் குறித்து விவாதம்

மானாமதுரை ஜூலை.7-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி சாதாரண கூட்டம் நகர்மன்றத் தலைவர் மாரியப்பன் கென்னடி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், முன்னாள் முதல்வர்கள் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, மு.க.ஸ்டாலின் ஆகியோரின் படங்களுடன் தற்போதைய முதல்வர் சி. ஜோசப் விஜயின் புகைப்படமும் இடம்பெற்றது.

இதுகுறித்து பாஜக கவுன்சிலர் நமகோடி எ. முனியசாமி, பிரதமர் நரேந்திர மோடியின் புகைப்படத்தையும் வைக்க வேண்டும் என கோரினார். அதேபோல், அதிமுக கவுன்சிலர் தெய்வேந்திரன், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் புகைப்படமும் இடம்பெற வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த நகர்மன்றத் தலைவர், மாநில முதல்வர்களின் படங்கள் மட்டுமே இடம்பெறும் என்றும், இதுதொடர்பாக அடுத்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார்.

## பாக்யா பப்ளிகேஷன்ஸ் புதிதாக வெளியிடஉள்ள அ. ஈஸ்வரன் எழுதிய "முதல் தலைமுறை பட்டதாரி!" "கண்ணீரும் இனிக்கின்றதே!" நூல்களை சினிமா இயக்குனர் பி வாசு வெளியிட உள்ளார்

பாக்யா பப்ளிகேஷன்ஸ் புதிதாக வெளியிடஉள்ள அ. ஈஸ்வரன் எழுதிய "முதல் தலைமுறை பட்டதாரி!" "கண்ணீரும் இனிக்கின்றதே!" ஆகிய இரு நூல்களை சினிமா இயக்குனர் பி வாசு அவர்கள் வெளியிட உள்ளார்கள் முதல் நூலான முதல் தலைமுறை பட்டதாரி என்ற நாடக நூல்பத்து தலைமுறைகளின் கஷ்டங்களை கூட ஒரு தலைமுறையின் கல்வி மாற்றியமைத்து விடும் என்பதை வலியுறுத்துவது அந்த நாடகத்தின் நோக்கம் இரண்டாவது நூலான கண்ணீரும் இனிக்கின்றதே என்ற நாடக நூல் ஒரு பெண்ணுக்கு சமூகத்தில் கணவனால் கிடைக்கும் அங்கீகாரத்தை விட கல்வியால் கிடைக்கும் அங்கீகாரமே சிறந்தது என்பதை வலியுறுத்துவது குடிக்கும் கணவனால் கணவனை பிரிந்து கஷ்டப்பட்டு வளர்த்து தன் மகளைப் படிக்க வைத்து தன் மகள் உயரிய பதவியில் அமர வைக்கப்படுகிறாள் அந்த உயரிய பதவியில் அமர்ந்திருக்கும் தன் மகளை பார்த்து ஆனந்த கண்ணீர் வடிப்பதே அந்தக் கண்ணீர் அவளுக்கு உப்பு கரிக்கவில்லை இனிப்பாக இருக்கிறது





வெளியிட உள்ளஇரு நூலின் பிரதிகளை அவரது இல்லத்தில் சந்தித்து வழங்கிய விட்டு வந்தேன்

சினிமா ஒளிப்பதிவாளர் ரவீந்திரன் அவர்கள் நூலை பெற்றுக் கொள்ள இருக்கிறார்கள்

நூலின் வெளியீட்டு விழா நிகழ்வு விரைவில் அகில இந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தில் நடைபெற உள்ளது

நூலாசிரியர் ஈஸ்வரன் இதுவரை 22 நூல்களை எழுதி உள்ளார். அதில் அவற்றில் 17 நூல்கள் தமிழக அரசு பொது நூலகத்துறையால் தேர்வு செய்யப்பட்டு தமிழகமெங்கும் உள்ள நூலகங்களில் உள்ளன மேலும் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக அவர் எழுதிய தேசிய விழா என்ற நூல் தமிழ்நாடு அரசின் மாநில அளவில் சிறந்த நூலாக தேர்வு செய்யப்பட்டுள்ளதுபரிசு பெற்றுள்ளார் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டு துறையின் சார்பாக கலை நன்மணி விருது பெற்றுள்ளார்.

## லோக் ஆயுக்தா சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த கோரிய வழக்கு

### தமிழக அரசு 6 வாரங்களுக்குள் பதிலளிக்க உத்தரவு

சென்னை, ஜூலை.07-

தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரிய மனுவுக்கு 6 வாரங்களில் பதிலளிக்க தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அரசு ஊழியர்கள், அதிகாரிகள் மீதான ஊழல் புகார்களை விசாரிப்பதற்காக, ஒன்றிய அரசு, லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டத்தை 2013 ஆம் ஆண்டு இயற்றியது. இந்த சட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, 2018 நவம்பர் முதல் அமலுக்கும் வந்தது.

இந்நிலையில், இந்த சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி, தஞ்சாவூரைச் சேர்ந்த வி.ஜீவகுமார் என்பவர் பொதுநல வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், ஊழல் குற்றச் சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக அமைக்கப் பட்டுள்ள தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம் தீவிரமாக அமல்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 முதல் 2024 வரை 617 புகார்களை முடித்து வைத்துள்ளதாகவும், 2025 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 137 புகார்கள் நிலுவையில் உள்ளதாகவும் லோக் ஆயுக்தா இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், எத்தனை வழக்குகளில் விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது; நிலுவையில் உள்ள வழக்குகள் என்ன நிலையில் உள்ளன என்ற விவரங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை என மனுவில் கூறப்பட்டுள்ளது.

மேலும், லோக் ஆயுக்தா செயலாளராக, துணை செயலாளர் அந்தஸ்து அதிகாரியை நியமிக்க கூறியுள்ள நிலையில், ஓய்வு பெற்ற அல்லது பணியில் உள்ள மாவட்ட நீதிபதியை செயலாளராக நியமிக்கும் வகையில் விதிகளை திருத்தி, 2020 ஆம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும், இது மத்திய அரசு சட்டத்தை மீறிய செயல் என்பதால், செயலாளர் நியமனம் தொடர்பாக விதிகளை திருத்தி வெளியிடப்பட்ட அரசாணையை ரத்து செய்ய வேண்டும் எனவும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, 6 வாரங்களில் பதிலளிக்கும்படி, தமிழக மனிதவள மேம்பாட்டு துறை, உள்துறை செயலாளர், பொதுத்துறை செயலாளர் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்துள்ளது.

## திருச்செந்தூர் கோயில் தரிசன கட்டண உயர்வு குறித்து ஜூலை 21 வரை ஆட்சேபனை தெரிவிக்கலாம்: ஐகோர்ட்

மதுரை, ஜூலை.07-

திருச்செந்தூர் கோயில் தரிசன கட்டண உயர்வு குறித்து ஆட்சேபனை தெரிவிக்க வேண்டிய கடைசி நாள் ஜூலை 21 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூரை சேர்ந்த பா. இராம்குமார் ஆதித்தன், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு: இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் தரிசன கட்டணம், பூஜை கட்டணம் மற்றும் சிறப்பு பூஜைகள் கட்டணம் தக்கார் அல்லது அறங்காவலர் குழு தீர்மானத்தின் அடிப்படையில் பொது மக்களிடம் கருத்து நிர்ணயம் செய்யப்படும்.

திருச்செந்தூர் சுப்பிர மணிய சுவாமி திருக்கோயில் உட்பட பல கோயில்களில் கட்டண உயர்வு குறித்து கருத்து கேட்க அறிவிப்பு பெரிய அளவில் விளம்பரப்படுத்த வில்லை. அதனால் பொது மக்களுக்கும் பக்தர்களுக்கும் கட்டணம் உயர்வு குறித்து தெரிவதில்லை. கட்டண உயர்வு குறித்து அறிவிப்பு வெளியிடும்போது இந்து சமய அறநிலையத் துறை இணையதளங்களில், மாவட்ட இணைய தளங்களில் அறிவிப்பு வெளியிட வேண்டும்.



கோயில் வளாகத்தில் பக்தர்கள் பார்வையில் தெரியுமாறு பெரிய அளவில் பிளக்ஸ் போர்டுகள் வைக்க வேண்டும். ஆட்சேபனைகள், கருத்துகள் மற்றும் அதனடிப்படையில் கோயில் இணைய தளங்களில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இது தொடர்பாக அனைத்து கோயில்களுக்கும் வழிகாட்டு நெறிமுறைகளை இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பிறப்பிக்க உத்தரவிடவேண்டும் என வழக்கில் தொடர்ந்தேன்.

அந்த வழக்கில் என் கோரிக்கையை இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பரிசீலிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மற்றொரு வழக்கில் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நான்கு மாதங்களுக்குள் அறங்காவலர் குழு அமைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் தக்கார் தீர்மானம் அடிப்படையில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் கட்டணச் சேவைகள் கட்டணத்தை உயர்த்த பொது மக்கள் மற்றும் பக்தர்களிடம் கருத்து கேட்டு எவ்வித கையெழுத்தும் இன்றி 20.06.2026 அன்று மட்டும் கோயில் அறிவிப்பு பலகையில் அறிவிப்பு ஒட்டப்பட்டிருந்தது.

இது குறித்து இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கட்டணம் எதுவும் உயர்த்தவில்லை. கட்டண உயர்வு குறித்து கருத்துதான் கேட்கிறோம் என்று பேட்டி அளித்தார்.

உயர் நீதிமன்ற உத்தரவுப்படி அறங்காவலர் குழு அமைக்காத நிலையில், தக்கார் தீர்மானம் அடிப்படையில், பரவலாக பக்தர்களுக்கும் பொது மக்களுக்கும் தெரிவிக்காமல் வெளியிடப்பட்ட கட்டண உயர்வு அறிவிப்பு செல்லாது எனவும், அறங்காவலர் குழுத் தீர்மானம் அடிப்படையில் தான் கட்டண உயர்வு அறிவிப்பு வெளியிட வேண்டும் என உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் கார்த்திகேயன், சக்திவேல் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில், "மனுதாரர் தனது ஆட்சேபனையை பதிவு செய்துள்ளார். ஜூன் 25ம் தேதி அவர் வழங்கிய ஆட்சேபனை, 27ம் தேதி கிடைக்கப் பெற்றது. மனுதாரர் 28ம் தேதி வழக்கை தாக்கல் செய்துள்ளார்" எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், கட்டண உயர்வு தொடர்பான விளம்பரத்தை இந்து சமய அறநிலைய துறையின் அதிகாரப் பூர்வ இணையதளத்தில் வெளியிடவும், ஆட்சேபனைகள் தெரிவிக்க வேண்டிய கடைசி நாள் ஜூலை 7 என்பதை 21ஆம் தேதி வரை நீட்டிக்கவும் உத்தரவிட்டனர்.

# மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி 220க்கும் மேற்பட்டோர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கில் இணைந்தனர்



மாதவர, ஜூலை.7-

சென்னை ரம்ஜான் மஹாலில் நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொதுக்குழுக் கூட்டத்தில் மனிதநேய மக்கள் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளராக இருந்த வழக்கறிஞர் புழல் ஷேக் முஹம்மது அலி அக்கட்சி யிலிருந்து விலகி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர்மொகிதீன் தலைமையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கில் இணைந்தார். பின்னர் வழக்கறிஞர் புழல் ஷேக் முஹம்மது அலி தலைமையில் அவரது ஆதரவாளர்கள் புழலில் உள்ள நிலா பேலஸில் நடைபெற்ற இணைப்பு விழாவில் மனிதநேய மக்கள் கட்சி மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து விலகிய 220க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், தாங்கள் வகித்து வந்த கட்சிப் பொறுப்புகள் மற்றும் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்து விலகி இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கில் தங்களை இணைத்துக் கொண்டனர். இதனைத்தொடர்ந்து புதிதாக இணைந்த அனைவருக்கும் கட்சியின் துண்டு (ஷால்) அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பொதுச்செயலாளர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், துணைத் தலைவரும் ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினரும் வக்ஃப் வாரியத் தலைவருமான கே. நவாஸ்கனி எம்.பி., மாநில செயலாளர் மற்றும் அமைச்சர் ஆடுதுறை ஷாஜஹான், பாத்திமா முசாபர், அன்சாரி மதார், கமுதி சம்சுதீன், சல்மான், புளியங்குடி அமீன், ஜலாலுதீன், கோம்பை நிஜாமுதீன், செய்யது பட்டானி, பழவை அன்சாரி, மாணவரணி தலைவர் முஹம்மது உள்ளிட்ட மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியை புழல் ரஹமத்துல்லாஹ் தொகுத்து வழங்கினார். கே. முஹம்மது ரசாக், புழல் என்.சாதிக் பாஷா, இர்பான். ஆகியோர் ஆகியோர் தீர்மானங்கள் வாசித்தனர் யு. நூர்முஹம்மது வரவேற்புரையாற்றினார். சண்முகபுரம் யு. அயூப் நன்றியுரைய ாற்றினார்பெ ான்னேரி பாசித், பொன்னேரி ரஃபி, கும்மிடிப்பூண்டி சுல்தான், கும்மிடிப்பூண்டி ரியாஸ் ஆகியோர் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.



■ நீலகிரி மாவட்டம் கோத்தகிரி , பசுந்து அறக்கட்டளை சார்பில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வழங்கிய புதிய "ஆம்புலன்ஸ்" சேவை துவக்க விழாவில்நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளரும் குன்னூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.எம்.ராஜூ கலந்துகொண்டு புதிய ஆம்புலன்ஸ் சேவையை துவங்கி வைத்தார்.





■ சென்னை மாநகரில் அழகிய கடலோரத்தில், திருவல்லிக்கேணி நடுக்குப்பத்தில் அமைந்துள்ள, அருள்மிகு ஸ்ரீ பயிண்டியம்மன் திருக்கோயில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிக்கும் அன்னையாக, அருள்மிகு பயிண்டியம்மன் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு பஞ்சவர்ணம் தீட்டப்பட்டு நிகழும் மங்களகரமான பராபர வருடம் ஆனி மாதம் 21 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று பஞ்சமி திதியும், சதயம் நட்சத்திரமும் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் மிதுன லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுற்று வட்டார பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்து அறநிலையத் துறைக்கு உட்பட்ட கோயில், செயல் அலுவலர் கார்த்திகேயன், ஆலய தலைவர் அன்பு குமார், செயலாளர் வெங்கடேசன்,பொருளாளர் கரிகாலன்இவர்கள் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.



■ மதுரை மாநகராட்சி, வெள்ளக்கல் குப்பை கிடங்கில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தை தொடர்ந்து மதுரை மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., உடனடியாக சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு உடன் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு பணிகள் தொடர்பாக அலுவலரிடம் கேட்டறிந்து தீ மேலும் பரவாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தீயணைப்புத்துறை அலுவலருக்கு அறிவுரை வழங்கினார்.



## உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க மானியத்தொகை விண்ணப்பங்கள வரவேற்பு

தேனி, ஜூலை.7-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், ., செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது,

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 18 வயது முதல் 60 வயது வரை உள்ள உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க மானியத்தொகை ரூ.50,000/ வழங்கிட தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டு. தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் பேஷ்இமாம்கள், ஆலிம்கள், அரபு ஆசிரியர்கள்/ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

தற்போது மேற்படி திட்டத்தில் பயன் பெற விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் 30.06.2026 லிருந்து 15 நாட்கள் நீட்டிக்கப்படுகிறது. எனவே, தேனி மாவட்டத்தில் இரு சக்கர வாகனத்திற்கான மானியம் பெற மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்ளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நல அலுவலகத்தில் 15.07.2026 ஆம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

## "முதலமைச்சர் மாநில இளைஞர் விருது" விண்ணப்பங்கள் வரவேற்பு




தேனி, ஜூலை.7-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது, சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, "முதலமைச்சர் மாநில இளைஞர் விருது" ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படும். 2026 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருதிற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் முன்னதாக என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, தகுதியுடைய இளைஞர்கள் அதிகளவில் பயன்பெறும் வகையில், விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள் 13.07.2026 அன்று மாலை 5.45 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதிற்கு 15 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட ஆண் மற்றும் பெண் இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பதாரர்கள் சமூக நலனுக்காக தன்னார்வத் தொண்டாற்றியிருக்க வேண்டும். மேலும், குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வசித்திருக்க வேண்டும். மத்திய மற்றும் மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. தகுதியுடைய இளைஞர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in என்ற இணையதளத்தில் 13.07.2026 அன்று மாலை 5.45 மணிக்குள்தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்ய வேண்டும். இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தகுதியுடைய இளைஞர்கள் காலதாமதமின்றி விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், .தெரிவித்துள்ளார்.




## புரட்சி பாரதம் கட்சி திருவள்ளூர் வடமேற்கு மாவட்ட துணைச் செயலாளர் பிறந்தநாள் விழா

திருவள்ளூர், ஜூலை.7-

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம் பாகல்மேடு அருகே உள்ள செம்பேடு கிராமத்தில் புரட்சி பாரதம் கட்சியின் வடமேற்கு மாவட்ட துணைச்செயலாளர் ஊத்துக்கோட்டை டாக்டர் அம்பேத்கரை சேர்ந்த D.செல்வம் BA,LLபி. 58வது ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு அக்கட்சியின் சார்பில் மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் வழக்கறிஞர் ஆதித்தமிழர் மேஷாக் தலைமையில் பூண்டி ஒன்றிய செயலாளர் மெய்யூர் பாரதி மற்றும் அன்பு, ரஜினி, மைக்கல், Dr.அம்பேத்கர் நகர் தளபதிஆதி அதிமுக கிளைசெயளர் D.சரவணன் கலந்து கொண்டு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, பட்டாசு வெடித்து, கேக்வெட்டி பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்



## கிருஷ்ணகிரியில்அண்ணா தொழிற்சங்க பேரவை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

கிருஷ்ணகிரி, ஜூலை.7-

கிருஷ்ணகிரியில் அண்ணா தொழிற்சங்க பேரவை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.கிருஷ்ணகிரியில், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை மாவட்ட செயலாளர் சரவணன் தலைமை வகித்தார். அதிமுக மாவட்ட செயலாளர்கள் அசோக்குமார், ராமு, அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தர்மபுரி மண்டல போக்குவரத்து கழக ஏ.டி.பி. பிரிவு மண்டல தலைவர் முருகன் வரவேற்புரையாற்றினார்.

இதில் அதிமுக துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி, அண்ணா தொழிற்சங்க பேரவையின் மாநில செயலாளர் தமிழரசன், துணை தலைவர் கோவிந்தராஜ் ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி பேசினர். இதில் சம்பத்குமார் எம்எல்ஏ., தர்மபுரி மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் அருள்சாமி, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் சீனிவாசன் உள்பட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் இணை செயலாளர் ராஜகோபால் நன்றி கூறினார்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தி.மு.க வின் அரசியல் ஆசான் வெள்ளி விழா கண்ட முன்னாள் தாம்பரம் நகர கழக செயலாளர் தாம்பரம் நகர மன்ற முன்னாள் தலைவர் வ.கன்னியப்பன் அவர்களின் 19ஆம் ஆண்டு நினைவு அஞ் சலியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் அவர்கள் அவரது திருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்திய பின்னர் ஊர்வலமாக நடந்து சென்று தாம்பரம் இடுகாட்டில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மௌன அஞ்சலி செலுத்திய போது. உடன் துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பகுதி துணை செயலாளர் வ.க.ரவி, மருத்துவ அணி டாக்டர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, மாநகர மகளிர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம், பகுதி அவைத்தலைவர் டி.ஆர்.கோபி, மாநகர துணை செயலாளர் சதாசிவம் மற்றும் கழக உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நினைவிடத்தில் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்



## செங்குன்றத்தில் சிவா அறக்கட்டளை சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூலை.7-

செங்குன்றத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ தேவி பராசக்தி வீரம்மாகாளி அம்மன் ஆலயத்தின் 48ம் ஆண்டு தீமிதி திருவிழாவை முன்னிட்டு செங்குன்றம் சிவா அறக்கட்டளை சார்பில் பக்தர்களுக்கு குளிர்பானங்கள் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி அறக்கட்டளையின் நிர்வாகிகள் ஒ.கே.பாபு தலைமையில் நடை பெற்றது. நிகழ்ச்சியில் காப்புகட்டியுள்ள சுமார் 2000க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு சுவையான குளிர்ந்த குளிர்பானங்கள், பழங்கள் மற்றும் அன்னதானம் வழங்கினர்.இதில் நண்பர்கள் குடும்பத்தினர்கள் கலந்துகொண்டனர்



# செங்குன்றம் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர் சங்கம் சார்பில் கல்வி உதவித் தொகை வழங்கல்

மாதவரம், ஜூலை.7-

செங்குன்றம் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர் சங்கம் சார்பில் செங்குன்றம் சுற்றுவட்டார 109 அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி சங்கத் தலைவர் டி.கோபி தலைமையில் சங்க திருமண மண்டபத்தில் நடைபெற்றது. துணைத்தலைவர் எம்.ஜெயபால், செயலாளர் ஏ.லோகநாதன், பொருளாளர் கே.என். குணசேகரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு, மருத்துவர் என்.கோபாலகிருஷ்ணன், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மருத்துவமனை மருத்துவர் சக்தி, மாவட்டக் கல்வி அலுவலர் (பொறுப்பு) வி.லிங்கேஸ்வரன், தமிழ்நாடு அரிசி ஆலை உரிமையாளர்கள் சம்மேளனத் தலைவர் டி.துளசிங்கம், செயலாளர் டாக்டர் ஏ.சி. மோகன் ஆகியோர் கலந்து கொண்டு அரசுப் பள்ளிகளில் படித்த 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு தலா ரூ. 5000, ரூ. 4000, ரூ. 3000 மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணாக்கர்கள் உள்ளிட்ட 109க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு மொத்தம் ரூ. 3,68,000 கல்வித் தொகையை வழங்கினர்.

இதில் சங்க இணைச் செயலாளர்கள் ஆர்.நாகேந்திரன், ஜெ.பால்ராஜ், செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.டி. ஞானம், என்.சந்திரசேகர், பிஎஸ்வி. திருநாவுக்கரசு, ஜெ.ரகுகுமார், பி.கோதண்டபாணி, எம்.பொன்னையன் மற்றும் அரசு பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரிய ஆசிரியைகள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள் திரளாக கலந்துகொண்டனர்.



■ கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஈடுபடவுள்ள களபணியாளர்களுக்கான பயிற்சி வகுப்பை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேற்று (06.07.2026) பார்வையிட்டார். உடன் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் ராஜலட்சுமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.






# தாம்பரத்தில் தமிழக வெற்றி கழகத்தில் 300க்கும் மேற்பட்டோர் இணைப்பு விழா

தாம்பரம், ஜூலை.7-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில், 300க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினரை தமிழக வெற்றி கழகத்தில் இணைக்கும் பிரம்மாண்ட இணைப்பு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு ஏ.ஆஷிக் ஹமீது தலைமை தாங்கினார். தாம்பரம் மத்திய பகுதி கழகத் தலைவர் செ. ஜோஸ்வா சுந்தர் வரவேற்புரை வழங்கினார்.மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் த.சரத்குமார் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், 300க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றி கழகத்தில் தங்களை அதிகாரப்பூர்வமாக இணைத்துக் கொண்டனர். விழாவில் செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட இணைச் செயலாளர் இ. விஜய் தியாகு, மாவட்ட பொருளாளர் என்.வி. ராஜேந்திரன், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எம். பிரவீன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.ஜாபர், சீனி, மாலிக், ஷரீஃப், ஜூபைர், ரீஜி, இனாமுல், ஜின்னா ஆகியோர் நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியை அப்துல் ரகுமான் தொகுத்து வழங்கினார்.மேலும், மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள், மாணவரணி, மகளிரணி, வழக்கறிஞர் அணி, வட்ட மற்றும் வார்டு நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.இறுதியாக, ஏ அப்துல் முனாப் நன்றி உரையாற்றினார்.

# கிருஷ்ணகிரியில்தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு தலைமை சங்கம் சார்பில்உழவர் தின பேரணி மற்றும் பொதுக்கூட்டம்



கிருஷ்ணகிரி, ஜூலை.7-

கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு தலைமை சங்கம் சார்பில் உழவர் தின பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு தலைமை சங்கம் சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு, மாநில தலைவர் நசீர் அகமத், மாநில செயலாளர் ராஜா, மாநில பொருளாளர் கோவிந்தராஜன், மாநில துணை தலைவர்கள் பாலகாந்தி, பார்த்தீபன், கோபி, சுரேஷ் ஆகியோர் கூட்டு தலைமை வகித்தனர். மகளிர் அணி மாநில தலைவர் பெருமாகாசி, மாநில பொதுச் செயலாளர் கோமலா, மாநில இளைஞர் அணி தலைவர் கணேசன், மாநில வேளாண் வனப்பயிரிகள் சந்திரசேகர், வேளாண் வணிகம் தணிகாசலம், வேளாண் பொறியியல் பணிகள் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்க மாநில தலைவர் தெய்வசிகாமணி, தமிழ்நாடு காவேரி விவசாயிகள் சங்க மாநில தலைவர் பழனியப்பன், கவுரவ தலைவர் ராமதாஸ், டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு மாநில தலைவர் இளங்கீரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினர்.கூட்டத்தில், கர்நாடகா அரசு மேகதாது அணை கட்டக்கூடாது. த.வெ.க., அறிக்கையில் தெரிவித்துள்ளபடி கூட்டுறவு கடன் சங்கங்களிலுள்ள பயிர்கடன், சிறு, குறு விவசாயிகளுக்கான பயிர்க்கடன் முழுவதும் பெரு விவசாயிகளுக்கு 50 சதவீதம் என அறிவித்துள்ளபடி, எந்த நிபந்தனையும் இன்றி கடன் தள்ளுபடி வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு நடப்பாண்டு செய்ய கூட்டுறவு கடன் சங்கங்களின் பயிர்கடன் வழங்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆவின்பால் கொள்முதல் விலை பசும்பால் ஒரு லிட்டருக்கு 50 ரூபாயும், எருமை பால் ஒரு லிட்டருக்கு 70 ரூபாயும் உற்பத்தி மானியம் லிட்டருக்கு 6 ரூபாய் வீதம் வழங்க வேண்டும். மாம்பழ கூழ் தொழிற்சாலை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழக அரசு அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 21 கோரிக்கைகளை தீர்மானங்களாக நிறைவேற்றினர்.

முன்னதாக தமிழ்நாடு விவசாயிகள் விழிப்புணர்வு தலைமை சங்கம் சார்பில், இலவச மின்சாரம் கேட்டு போராடி உயிர் நீத்த தியாகிகளின் நினைவாக, கிருஷ்ணகிரி எல்.ஐ.சி., அலுவலகம் அருகில் இருந்து உழவர்தின பேரணி துவங்கி நகரின் முக்கிய சாலைகள் வழியாக சென்று, பொதுக்கூட்டம் நடந்த திருமண மண்டபத்தில் நிறைவடைந்தது.

# கிருஷ்ணகிரி ஏகாம்பரமேஸ்வரர்-காமாட்சியம்மன் கோயிலில் மஹா கும்பாபிஷேகம்

## ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம்



கிருஷ்ணகிரி, ஜூலை.7-

கிருஷ்ணகிரி பழையபேட்டை நரசிம்மசுவாமி கோவில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஏகாம்பரமேஸ்வரர்-காமாட்சியம்மன் கோயிலின் மஹா கும்பாபிஷேக விழா நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

விழாவையொட்டி கடந்த 3ம் தேதி விக்னேஸ்வர பூஜை, புண்யாகவாசனம், வாஸ்து சாந்தி, அங்குரார்ப்பணம், யாகசாலை பிரவேசம் உள்ளிட்ட முதல் நாள் யாக பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நாள் வேத பாராயணம், திருமுறை பாராயணம், பூர்ணாஹூதி, யந்திர ஸ்தாபனம், அஷ்டபந்தன மருந்து சாற்றுதல் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

நேற்று அதிகாலை விக்னேஸ்வர பூஜை, பிம்ப சுத்தி, தத்துவார்ச்சனை, மஹா பூர்ணாஹூதி உள்ளிட்ட இறுதிக்கட்ட யாக பூஜைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, காலை 7 மணியளவில் சிவஷண்முக ஞானாச்சார்ய குரு சுவாமி மற்றும் வித்யா உபாசகர் சிவராஜ் சுவாமி ஆகியோர் கோபுர கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றி மஹா கும்பாபிஷேகத்தை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து மூலவருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், மகா தீபாராதனை நடைபெற்றது. பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

விழாவில் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோயில் தர்மகர்த்தா, விஸ்வகர்மா சமுதாயத்தினர் மற்றும் இளைஞர்கள் செய்திருந்தனர்.



# தமிழகத்தில் ஜூலை 12 வரை மிதமான மழை வாய்ப்பு

சென்னை, ஜூலை.7-

தமிழகத்தில் நாளை முதல் ஜூலை 12ம் தேதி வரை மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு ஒடிசா மேற்கு வங்க கடலோர பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, வடக்கு ஒடிசா கடலோர பகுதியில், பாலசோர் பகுதிக்கு அருகில் நேற்று கரையை கடந்தது.

தமிழகத்தில் நாளையும் (ஜூலை 7), நாளை மறுதினமும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.9 முதல் 12ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.மத்திய வங்கக் கடலின் பெரும்பாலான பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக் கடலின் சில பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் கூடலூர் சந்தையில் 3 செமீ, மேல் கூடலூர், குன்னூர், செருமுள்ளி, வூட் பிரையர் எஸ்டேட், பார்வூட் ஆகிய இடங்களில் தலா 2 செமீ மழை பதிவாகியுள்ளது.

# கிருஷ்ணகிரியில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தின பேரணி; 15 தீர்மானங்கள் நிறைவேற்றம்



கிருஷ்ணகிரி, ஜூலை.7-

:தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரியில் நேற்று மாலை பிரம்மாண்ட பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு, விவசாயிகளின் நலன் தொடர்பான 15 முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினர். கிருஷ்ணகிரி பழையபேட்டை காந்தி சிலையிலிருந்து புதிய பேருந்து நிலையம் வரை நடைபெற்ற பேரணியைத் தொடர்ந்து, புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணா சிலை எதிரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட பொதுச் செயலாளர் அனுமந்தராஜ் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மாவட்ட இளைஞரணி தலைவர் சத்தியமூர்த்தி, மேற்கு மாவட்ட பொருளாளர் சுப்பிரமணிரெட்டி ஆகியோர் வரவேற்றனர். மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் தேசிய ஒருங்கிணைப்பாளர் பி.ஆர். பாண்டியன், கொங்கு மண்டல தலைவர் பாபு, பால சுப்பிரமணியம், தேயிலைத் தோட்ட தொழிலாளர் சங்க தலைவர் மஞ்சை மோகன், கர்நாடக விவசாய சங்க தலைவர் குருபூர் சாந்தகுமார், முன்னாள் எம்.பி. நரசிம்மன் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கருத்துரையாற்றினர்.

கூட்டத்தில், தெலுங்கானா அரசைப் போல ஏக்கருக்கு ரூ.10,000 உற்பத்தி மானியம் வழங்க வேண்டும், ஒகேனக்கல் நீரை நீரேற்று திட்டம் மூலம் பல மாவட்டங்களின் விவசாயத்திற்கு கொண்டு செல்ல வேண்டும், மாபழத்திற்கு விலை ஆதரவு மற்றும் மானியம் வழங்க வேண்டும், விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும், 100 நாள் வேலைத் திட்டத்தை விவசாய பணிகளுக்கு பயனுள்ளதாக செயல்படுத்த வேண்டும், பால் உற்பத்திக்கு லிட்டருக்கு ரூ.6 மானியம் வழங்க வேண்டும், கால்நடை தீவனத்தை 50 சதவீத மானியத்தில் வழங்க வேண்டும், கூட்டுறவு மற்றும் ஆவின் பணியாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஆன்லைன் பரிவர்த்தனை மறுப்பு வாடிக்கையாளரிடம் தகாத முறையில் பேசியதாக புகார்




சிவகங்கை, ஜூலை.7-

சிவகங்கை மாவட்டம் மதகுபட்டி அருகே கல்லல் செல்லும் விலக்கில் செயல்பட்டு வரும் ஒரு பேக்கரியில், ஆன்லைன் பரிவர்த்தனையை ஏற்க மறுத்ததுடன் வாடிக்கையாளரிடம் தகாத வார்த்தைகளில் பேசியதாக புகார் எழுந்துள்ளது.

தகவலின்படி, அங்கு தேநீர் அருந்தச் சென்ற வாடிக்கையாளரிடம் அப்போது ரொக்கப் பணம் இல்லாததால், ரூ.23 ஐ ஆன்லைன் மூலம் செலுத்துவதாக தெரிவித்தார். அதற்கு கடையில் பணியாற்றிய ஊழியர், "இங்கு ஆன்லைன் பரிவர்த்தனை செய்யக்கூடாது. யாரிடமும் ஆன்லைன் பணம் வாங்க வேண்டாம் என்று உரிமையாளர் குறிப்பாக கூறியுள்ளார்" என தெரிவித்ததுடன், வாடிக்கையாளரிடம் தகாத வார்த்தைகளில் பேசியதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, நாடு முழுவதும் ஆன்லைன் பரிவர்த்தனைகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், வாடிக்கையாளர்களிடம் இதுபோன்று நடந்து கொள்ளக் கூடாது என அந்த வாடிக்கையாளர் அறிவுறுத்தியதாகவும், அதற்கும் அந்த ஊழியர் தொடர்ந்து மரியாதைக்குறைவாக பேசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் மக்களை விட வெளியூரில் இருந்து பயணம் செய்பவர்களே அதிகளவில் அந்த சாலையில் வாகனங்களை நிறுத்தி தேநீர் அருந்திச் செல்வதாக கூறப்படும் நிலையில், இதுபோன்ற சம்பவங்கள் வணிக நிறுவனத்தின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.எனவே, வாடிக்கையாளர்களிடம் மரியாதையற்ற முறையில் நடந்துகொண்டதாக கூறப்படும் சம்பவம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணை நடத்தி, தவறு உறுதியானால் சம்பந்தப்பட்ட ஊழியர் மற்றும் உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிவகங்கையில்போலி ஆவணம் மூலம் நிலத்தை அபகரிக்க முயற்சிப்பதாக போலீஸ் SPயிடம்புகார்



சிவகங்கை, ஜூலை 07.

சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையில் உள்ள வள்ளலார் தெருவைச் சேர்ந்தவர்கள் அண்ணாமலை மற்றும் அவரது 3 சகோதரர்கள். இவர்கள் 4 பேரும் சேர்ந்து சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது.... எங்களுக்குச் சொந்தமான புஞ்சை நிலம் சிவகங்கையில் உள்ளது. இந்த புஞ்சை நிலம் 59 பையூர் பிள்ளைவயல் கிராமம் சர்வே எண்43/1 விஸ்தீரணம் 1 ஏக்கர் 72 சென்டும், புல எண் 43/3 விஸ்தீரணம் 8 ஏக்கர் 40 சென்டும் சிவகங்கை டவுன் நகரப் புல எண் 34 1, 35 எங்களுக்கு சொந்தமாக உள்ளது. இந்த நிலத்தில் அரசு போக்குவரத்து கழகம் மற்றும் நுகர்வோர் வாணிப கழகத்திற்கு 76 செண்டு நிலத்தை மட்டும் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் கொடுத்து அதற்கான இழப்பீட்டையும் பெற்று இருக்கிறோம். இந்நிலையில் மீதமுள்ள எங்களின் நிலத்தை சிவகங்கையில் வசித்து வரும் KR.ராஜா என்பவர், முத்துக்குமார், சுந்தரம், காந்திநாதன், பிச்சை, மதி, மற்றும் குருசாமி ஆகியோருடன் கூட்டுச் சேர்ந்து கூட்டுச் சதி செய்து எங்களுக்கு சம்பந்தமே இல்லாத நபர்களை வைத்து உண்மையை மறைத்து பவர் பத்திரம் பதிவு செய்துள்ளார். இந்த பவர் பத்திரத்தை பயன்படுத்தி எங்களுடைய நிலத்தை வேறு சிலருக்கு பத்திரப்பதிவும் செய்துள்ளார். மேற்கண்ட பிரச்சனைகள் தொடர்பாக 4 வழக்குகள் நிலுவையில் இருக்கும் போது உண்மைகளை மறைத்து KR.ராஜா என்பவர் சட்ட விரோதமாக இந்த இடங்களை வேறு சிலருக்கு பட்டா மாறுதல்கள் செய்யவும் தீவிர முயற்சி செய்து வருகிறார். எனவே சமூகம் அவர்கள் KR.ராஜா மற்றும் இவரோடு சேர்ந்து கூட்டுச் சதி செய்பவர்கள் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்து எங்களின் நிலத்தை மீட்டுத் தர உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு வேண்டுகிறோம். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.



# மதுரையில் பாலங்களில் முந்திச் செல்வதை தடுக்க புதிய முயற்சி: போக்குவரத்து காவல் ஆய்வாளரின் நடவடிக்கைக்கு பாராட்டு



மதுரை, ஜூலை.7-

மதுரை பாலங்களில் வாகனங்கள் ஆபத்தான முறையில் முந்திச் செல்வதால் ஏற்படும் சாலை விபத்துகளை கட்டுப்படுத்தும் நோக்கில், மதுரை தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி புதுமையான பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

நாளுக்கு நாள் சாலை விபத்துகள் அதிகரித்து, பலர் காயமடைவதோடு உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாக பாலங்களில் அதிவேகமாக செல்லும் இருசக்கர வாகன ஓட்டிகள் எதிரே வரும் வாகனங்களை முந்திச் செல்ல முயல்வதால் நேருக்கு நேர் மோதும் விபத்துகள் அதிகளவில் நிகழ்கின்றன.

இதனைத் தடுக்கும் வகையில், தேசிய நெடுஞ் சாலைத்துறையுடன் இணைந்து, மதுரையில் உள்ள தேவர் பாலம் மற்றும் முத்து பாலத்தின் நடுப்பகுதியில் ஒளிரும் தன்மை கொண்ட சிறிய அளவிலான பிளாஸ்டிக் டிவைடர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பாலங்களில் ஆபத்தான முறையில் முந்திச் செல்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய பாதுகாப்பு முயற்சிக்கு பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். இதுபோன்ற டிவைடர்களை மற்ற பாலங்கள் மற்றும் விபத்து அதிகம் நடைபெறும் சாலைப் பகுதிகளிலும் அமைக்க வேண்டும் என்றும், இதன் மூலம் உயிரிழப்புகள் மற்றும் காயங்களை கணிசமாகக் குறைக்க முடியும் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மதுரை தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணியின் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை, சாலை பாதுகாப்பை மேம்படுத்தும் சிறந்த முயற்சியாக பொதுமக்களிடையே பாராட்டைப் பெற்று வருகிறது.



# மதுரை மாவட்ட அளவிலான தடகளப் போட்டி: ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்ற சி.இ.ஓ.ஏ. பள்ளி மாணவர்கள்

மதுரை, ஜூலை.7-

மதுரையில் Suriyan FM சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான தடகளப் போட்டியில் சி.இ.ஓ.ஏ. பள்ளி மாணவர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளனர்.

மதுரை எம்.ஜி.ஆர். விளையாட்டு மைதானத்தில் நேற்று (04.07.2026) நடைபெற்ற இப்போட்டியில், மாவட்டத்தின் 72 பள்ளிகளைச் சேர்ந்த 1,613 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். மாணவர் பிரிவில் சி.இ.ஓ.ஏ. பள்ளியின் ஜெய் ஆதேஷ் பாண்டியன் (XI-E2) மற்றும் மனோ (XII-A2) ஆகியோர் Individual Champion பட்டத்தை வென்றனர். மேலும், 47 புள்ளிகள் பெற்று மாணவர் பிரிவில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் பள்ளி கைப்பற்றியது.மாணவியர் பிரிவில் 34 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்று பள்ளி மேலும் ஒரு சாதனையைப் பதிவு செய்தது.போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற ஒவ்வொரு மாணவர்களுக்கும் ரூ.1,000 மதிப்பிலான Iron Box, Bluetooth உள்ளிட்ட பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.



■ சென்னை, ரெட்ஹில்ஸ் அடுத்த காந்தி நகர், எம்ஜிஆர் நகர், கலைஞர் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஜடா முனிஸ்வரர் அங்காளம்மன் ஆலய புனராவர்த்தன ஜீர்ணோர்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலயத் தலைவர் ஜெகன் மற்றும் ஆலய விழா குழுவினர் கோயில் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினார். சாமி தரிசனம் செய்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., பெற்றுக் கொண்டார்.

# பைக் டாக்ஸி நடைமுறைக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்குவதில் என்ன தயக்கம் ஐகோர்ட் கிளை கேள்வி

மதுரை, ஜூலை.7-

பைக் டாக்ஸி நடைமுறைக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்குவதில் என்ன தயக்கம் என்று ஐகோர்ட் கிளை கேள்வி எழுப்பியுள்ளது. தமிழ்நாட்டில் பைக் டாக்ஸி சேவையை சட்டப்படி நடத்த அனுமதிப்பதற்கான விதிகளை உருவாக்கக் கோரிய வழக்கில் பைக் டாக்ஸிக்கு சட்டப்படி அனுமதி வழங்க வாய்ப்பு உள்ளதா என தமிழக அரசு பதில்மனு தாக்கல் செய்ய உத்தரவு அளித்துள்ளது



# டிப்பர், லாரி உரிமையாளர்கள் போர்க்கொடி: அதிகாரிகளின் நடவடிக்கையால் வாழ்வாதாரம் பாதிப்பு என குற்றச்சாட்டு

மதுரை, ஜூலை.7-

மதுரை மாவட்டத்தில் கிராவல், மணல் மற்றும் கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் செல்லும் டிப்பர் மற்றும் லாரி உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என அனைத்து டிப்பர் மற்றும் லாரி உரிமையாளர்கள் நலச்சங்கம் மாவட்ட ஆட்சியருக்கு மனு அளித்துள்ளது. அந்த மனுவில், டிரான்சிட் பாஸ் தொடர்பான விதிமுறைகள் என்ற பெயரில் அதிகாரிகள் வாகனங்களை தேவையின்றி பறிமுதல் செய்து பல நாட்கள் நிறுத்தி வைப்பதால் உரிமையாளர்களுக்கு கடும் பொருளாதார இழப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அபராதம் விதிப்பதற்குப் பதிலாக வாகனங்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கை வாழ்வாதாரத்தை பாதிப்பதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.மேலும், எம் சாண்ட், பிசாண்ட், ஜல்லி, கிராவல், மணல் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் அடிக்கடி சோதனைக்கு உட்படுத்தப்படுவதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.கிராவல் குவாரிகள் மூடப்பட்டதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளதாகவும், குவாரிகளை மீண்டும் திறக்கவும், டிரான்சிட் பாஸ் நடைமுறைகளை எளிமைப்படுத்தவும், தேவையற்ற வாகன பறிமுதல் நடவடிக்கைகளை கைவிடவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நலச்சங்கம் வலியுறுத்தியுள்ளது. அரசின் விதிமு றைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும், தொழிலாளர்கள் மற்றும் லாரி உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.




■ மதுரை மாவட்டம் விளாச்சேரியில் தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் அவர்களின் 156வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது நினைவு இல்லத்தில் உள்ள திருவுருவசிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., மாலையணிவித்து மரியாதை செய்து வரலாற்று புகைப்படங்களை பார்வையிட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் சோ.கார்த்திகேயன் (மதுரை கிழக்கு) , எம்.எம்.கோபிசன் (மதுரை தெற்கு) , மதுரை வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன் , செயதி மக்கள் தொடர்பு அலுவலர் பெ.ரா.வெற்றிவேந்தன் , உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) வா.பொ.வினோத் ஆகியோர் உடன் உள்ளனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161